16.04.2016

தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

### ஒட்டன்சத்திரம் காய்கறி சந்தையில் மிளகாய் விலை உயர்வு, வாழைக்காய் விலை சரிவு

ஒட்டன்சத்திரம் காய்கறி சந்தையில் மிளகாய் விலை உயர்ந்தும், வாழைக்காய் விலை சரிந்தும் இருந்தது.

திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் காய்கறி சந்தைக்கு தினசரி தக்காளி, முருங்கை, வெண்டைக்காய், சுரைக்காய், மிளகாய், கொத்தவரை உள்ளிட்ட காய்கறிகள் சுற்றியுள்ள கிராமங்களில் இருந்து விற்பனைக்கு வருகின்றன. அதேபோல், வாழைக்காய் சோழவந்தான் மற்றும் மேலூர் பகுதிகளில் இருந்து விற்பனைக்கு வருகின்றன.

இந்நிலையில், சில தினங்களுக்கு முன்பு உருண்டை மிளகாய் ஒரு கிலோ ரூ.25 வரை விற்பனையானது. ஆனால், வெள்ளிக்கிழமை ஒரு கிலோ ரூ. 63-க்கு விற்பனையானது. அதேபோல், சில தினங்களுக்கு முன் ரூ.17 வரை விற்பனையான வாழைக்காய் விலை குறைந்து, ரூ.10-க்கு விற்பனையானது.

மற்ற காய்கறிகளின் விலை நிலவரம்: 14 கிலோ கொண்ட ஒரு தக்காளி பெட்டி ரூ.130, பீன்ஸ் ரூ.40, சுரைக்காய் ரூ.2, தட்டப்பயறு ரூ.14, செடி முருங்கை ரூ.10, கரும்பு முருங்கை ரூ.12, மர முருங்கை ரூ.9, கொத்தவரை ரூ.7, வெண்டைக்காய் ரூ.11,டிஸ்கோ கத்தரிக்காய் (30 கிலோ பை) ரூ.260 வரை விற்பனையானது.

## சிறுதானிய உணவு விழிப்புணர்வு நிகழ்ச்சி

தருமபுரியில் சிறுதானிய உணவு விழிப்புணர்வு நிகழ்ச்சி அண்மையில் நடைபெற்றது.

தருமபுரி செந்தில் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியில், சிறுதானிய உணவு வகைகளான கம்பு, வரகு, கேழ்வரகு, குதிரைவாலி, சாமை, தினை, சோளம் போன்றவற்றின் பயன்களும், பக்குவமும் என்ற தலைப்பிலும், நாட்டு மூலிகை மருத்துவம் என்ற தலைப்பிலும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

பள்ளியின் நிர்வாக அலுவலர் சக்திவேல் தொடக்கி வைத்தார். இதில், பள்ளி முதல்வர்கள் வெங்கடாசலம், கிருஷ்ணவேணி, துணை முதல்வர்கள் வள்ளியம்மாள், ரபிக் அகமது உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

## வெற்றிலை விலை உயர்வு

பரமத்தி வேலூர் ஏலச் சந்தையில் வெற்றிலை விலை உயர்ந்துள்ளதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

பரமத்தி வேலூர் சுற்று வட்டாரப் பகுதிகளான பாண்டமங்கலம், பொத்தனூர், வேலூர், அனிச்சம்பாளையம், குப்புச்சிபாளையம், நன்செய் இடையாறு, பாலப்பட்டி உள்ளிட்ட பகுதிகளில் ஏராளமான ஏக்கரில் வெற்றிலை பயிர் செய்யப்பட்டுள்ளது. இங்கு விளையும் வெற்றிலைகள் கர்நாடகா, கேரளா, குஜராத், மகாராஷ்டிரா உள்ளிட்ட பல்வேறு மாநிலங்களுக்கும், சேலம், கோவை, மதுரை, திருப்பூர் உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களுக்கும் அனுப்பப்படுகிறது. கடந்த வாரம் நடைபெற்ற ஏலத்தில் வெள்ளைக்கொடி வெற்றிலை (இளம்பயிர் மார்) 104 கவுளி கொண்ட சுமை ஒன்று ரூ.4 ஆயிரத்துக்கும், கற்பூரி வெற்றிலை (இளம்பயிர் மார்) சுமை ஒன்று ரூ.2 ஆயிரத்து 500-க்கும் ஏலம் போனது.

வியாழக்கிழமை நடைபெற்ற ஏலத்தில் வெள்ளைக்கொடி வெற்றிலை (இளம்பயிர் மார்) 104 கவுளி கொண்ட சுமை ஒன்று ரூ.5 ஆயிரத்திற்கும், கற்பூரி வெற்றிலை (இளம்பயிர் மார்) சுமை ஒன்று ரூ.3 ஆயிரத்து 200-க்கும் ஏலம் போனது.

தற்பொழுது முதியம் பயிர் வெற்றிலை இல்லாததால் இளம் பயிர் வெற்றிலையின் விலை உயர்ந்துள்ளதாக விவசாயிகள் தெரிவித்தனர்.

## கோழி மனைகளை குளிர்ந்த நிலையில் வைத்திருக்க அறிவுறுத்தல்

கோடை வெப்பம் அதிகரித்துள்ளதால் கோழிகளின் இறப்பைத் தடுக்க கோழி மனைகளைக் குளிர்ந்த நிலையில் வைத்திருக்க வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இதுகுறித்து நாமக்கல் கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் வெளியிட்ட செய்திக்குறிப்பு: அடுத்த நான்கு நாள்களுக்கு வானம் லேசான மேகமூட்டத்துடன் வறண்ட வானிலை தொடரும். கோடையின் தாக்கம் மிக அதிகமாகக் காணப்படும். பகல் மற்றும் இரவு வெப்ப அளவுகள் ஒரு சேர உயர்ந்தும், காற்றின் வேகம் மிதமாகவும் காணப்படும்.

வானிலை கோடையின் உக்கிர வெளிப்பாட்டை உணர்த்துகிறது. கோழிகளுக்குத் தீவனமிடும் நேரத்தை மிகவும் கவனமாகப் பின்பற்ற வேண்டும். காலை 11 மணி முதல் மாலை 5 மணி வரையில் தீவனத்தைத் தவிர்த்து குளிர்ந்த குடிநீர் கிடைப்பதை உறுதி செய்ய வேண்டும்.

குறிப்பாக பிற்பகலில் 4 மணிக்கு மேல் 8 மணி வரையிலும் முட்டைக்கோழிகளுக்கு குளிர்ந்த நீர் கிடைக்குமாறு செய்வதால் வெப்ப அதிர்ச்சியால் கோழிகள் இரவு நேரங்களில் இறப்பது தவிர்க்கப்படும்.

கோடை மழை துவங்கி வெப்பம் குறையும் வரை கோழி மனைகள், குடிநீர்க் குழாய்கள் செயற்கை முறை நீர் தெளிப்பான் மற்றும் அடிக்கடி அதிக அழுத்தத்தில் நீரை வெளியேற்றுவது போன்ற முறைகள் மூலம் வெப்பமடையாமல் தடுக்கலாம்.

கோழியின நோய் கண்காணிப்பு மற்றும் கட்டுப்பாட்டு ஆய்வகத்தில் கடந்த வாரம் பரிசோதனை செய்யப்பட்ட இறந்த கோழிகள் பெரும்பாலும் வெப்ப அயற்சி நோயினால் பாதிக்கப்பட்டுள்ளது

தெரியவந்துள்ளது. ஆகவே பண்ணையாளர்கள் தகுந்த கோடைகால பராமரிப்பு முறைகளைக் கடைப்பிடிக்க வேண்டும்.

## எறையூர் சர்க்கரை ஆலையில் இயந்திரம் பழுது 2,500 டன் கரும்புகளுடன் காத்திருக்கும் விவசாயிகள்

பெரம்பலூர் மாவட்டம், எறையூர் சர்க்கரை ஆலையில் இயந்திரத்தில் ஏற்பட்ட பழுதால், அரைவைக்கு கொண்டு வரப்பட்ட சுமார் 2,500 டன் கரும்பு எடை குறைந்து விவசாயிகளுக்கு இழப்பு ஏற்படும் நிலை உருவாகியுள்ளது.

வேப்பந்தட்டை வட்டம், எறையூரில் உள்ளது நேரு சர்க்கரை ஆலை. பொதுத்துறை சர்க்கரை ஆலையான இதில் விவசாயிகளும், தமிழக அரசும் பங்குதாரர்களாக உள்ளனர். இங்கு, ஆண்டுதோறும் நவ. 14-ம் தேதி அரைவைப் பணிகள் தொடங்குவது வழக்கம். 2015-16-ம் ஆண்டுக்கான அரைவைப் பணி கடந்த டிச. 23-ம் தேதி தொடங்கியது. 2014- 2015 நடவு பருவத்தில் மொத்தம் 12,280 ஏக்கர் கரும்பு பதிவு செய்து, 2015- 2016 ஆம் ஆண்டிற்கான அரைவைப் பருவத்திற்கு 3,90,000 மெட்ரிக் டன் கரும்பு உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. இதில், எறையூர் சர்க்கரை ஆலையின் அரைவைக்கு 2,05,000 மெட்ரிக் டன் கரும்பை அரைவை செய்வது எனவும், பிற ஆலைகளுக்கு கரும்பு பரிமாற்றம் முறையில் தேசிய கூட்டுறவு சர்க்கரை ஆலைக்கு 1,20,000 மெட்ரிக் டன்னும், சேலம் கூட்டுறவு சர்க்கரை ஆலைக்கு 30,000 மெட்ரிக் டன்னும், கள்ளக்குறிச்சி -1 கூட்டுறவு சர்க்கரை ஆலைக்கு 35,000 மெட்ரிக் டன்னும் கரும்பு அனுப்ப திட்டமிடப்பட்டுள்ளது.

இதனிடையே, எறையூர் ஆலையில் தரமற்ற இயந்திரங்களால் அடிக்கடி பழுது ஏற்பட்டு அரவைப் பணிகள் தாமதமாக நடைபெற்று வருவதாக விவசாயிகள் தரப்பில் கூறப்படுகிறது.

இந்நிலையில், கடந்த 13-ம் தேதி மாலை இயந்திரத்தில் ஏற்பட்ட பழுதால் 3 நாள்களாக அரைவைப் பணி நிறுத்தப்பட்டது. இதனால், சுமார் 250-க்கும் மேற்பட்ட டிராக்டர்களில் கொண்டு செல்லப்பட்ட கரும்பு சுமை

ஆலை எதிரே நிறுத்தப்பட்டுள்ளதால், சுமார் 2,500 டன் கரும்பு காய்ந்து எடை குறைந்து இழப்பு ஏற்பட்டு வருவதாக விவசாயிகள் புகார தெரிவிக்கின்றனர்.

இதுகுறித்து தமிழக விவசாயிகள் சங்க மாநிலச் செயலர் ஆர். ராஜாசிதம்பரம் கூறியது:

பெரம்பலூர் சர்க்கரை ஆலையை சீரமைக்க எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை. கடந்த 2010-ம் ஆண்டில் தொடங்கப்பட்ட புனரமைப்பு பணிகள் தாமதமடைந்ததால் அடிக்கடி இயந்திரங்களில் பழுது ஏற்பட்டு வருகிறது. கரும்பு டன் ஒன்றுக்கு ரூ. 2,300 வழங்கப்படும் என அறிவித்திருந்த நிலையில், எறையூர் சர்க்கரை ஆலையில் ரூ. 45 பிடித்தம் செய்துகொண்டு, ரூ. 2,255 மட்டுமே விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது. மேலும், கரும்பு அனுப்பிய விவசாயிகளுக்கு பிப்.7 ஆம் தேதி வரை மட்டுமே பணம் பட்டுவாடா செய்யப்பட்டுள்ளது. அதன்படி, 80 ஆயிரம் டன் கரும்புக்கு ரூ. 18 கோடி வழங்கப்படாமல் உள்ளது. இன்னும், 60 ஆயிரம் டன் கரும்பு அரைவை நிலுவையில் உள்ளது.

எனவே, ஆலை தொடர்ந்து இயங்கவும், புதிய இயந்திரங்கள் நிறுவவும் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். மேலும், பாதிக்கப்பட்ட கரும்பு விவசாயிகளுக்கு உரிய இழப்பீடு வழங்க முன்வர வேண்டும் என்றார் அவர்.

தினமலர்

## இன்றைய வேளாண் செய்திகள்

**ஐஸ்கிரீம்**

ஐஸ்கிரீம் சாப்பிட்டால் தொண்டைவலி வரும். சளி பிடிக்கும் என்பது முழுமையான உண்மையல்ல. ஐஸ்கிரீம் தயாரிக்கப் பயன்படுத்தப்படும் பொருட்களின் தரமும், பாதுகாக்கப்படும் சூழலும் நன்றாக இருந்தால் ஐஸ்கிரீம் எந்த பிரச்னையையும் ஏற்படுத்துவதில்லை. எனவே தரமான ஐஸ்கிரீம்களையே தேர்ந்தெடுத்து பிரச்னைகளை தவிர்க்க வேண்டும்.

ஐஸ்கிரீமில் வைட்டமின் பி12 , வைட்டமின் கே ஆகியன உள்ளன. உடல்நிலையை சீராக வைத்திருக்க விண்வெளி வீரர்களுக்கு ஐஸ்கிரீம் பரிந்துரை செய்யப்படுகிறது. பாலில் உள்ள கொழுப்பு ஐஸ்கிரீமில் இருப்பதில்லை என்பது ஐஸ்கிரீமின் கூடுதல் பிளஸ். கால்சியம் சத்து ஐஸ்கிரீமில் இருந்து அதிகளவில் கிடைக்கிறது.

**பர்லியாரில் நாகலிங்க பூக்களுக்கு சீசன்**

குன்னூர்: குன்னூர் பர்லியார் பகுதியில் நாகலிங்க பூக்கள் அதிகளவில் பூத்துள்ளன.

இந்து மத பூஜை, வழிபாடுகளில் இறைவனுக்கு படைக்கப்படும் பொருட்களில், நாகலிங்க பூக்களும் ஒன்று. இந்த பூவின், செந்நிற இலைகளின் மையத்தில், பாம்பின் முகத்தை போன்ற தோற்றமும், அதற்குள் இருக்கும் விதை, லிங்கத்தின் வடிவத்தை நினைவுப்படுத்துவது போன்றும் இருப்பதால், மக்களின் ஆன்மிக காரியங்களில் நாகலிங்க பூக்கள் முக்கியத்துவம் பெறுகின்றன. குறிப்பாக, சிவன் கோவில்களில் இந்த பூக்களை வைத்து, பக்தர்கள் வழிபடுகின்றனர்.

மருத்துவ குணம் ஏராளம் தாவர ஆய்வாளர் டாக்டர் ராம் சுந்தர் கூறியதாவது:

நாகலிங்க இலை, பழங்களில் உள்ள 'டைஹைட்டேரா டையாகசின்டோலோ, குயினாசோலோன், டிரிப்டான்ரின், இண்டிகா இன்டிருபின், ஐசாடின்' போன்றவற்றில் நோய் எதிர்ப்பு சக்தி அதிகம் உள்ளது.

இதனால் தயாரிக்கப்படும் மருந்து, தோளின் மிருதுவான பகுதிகளில் பரவும் பூஞ்சை, பாக்டிரியாவை அழிக்கும் திறன் கொண்டவை; மரத்தின் பட்டை மலேரியா சுரபியை கட்டுப்படுத்தும். இதன் இலையை நன்றாக அரைத்து, பூஞ்சை கிருமியால் ஏற்படும் சொரி, சிரங்கு, படர்தாமரை, படை உள்ள இடங்களில் தடவினால், அவை குணமாகும். இதன் உலர்ந்த பழங்கள் தரையில் விழுந்து பெரும் சப்தத்தை ஏற்படுத்தும் என்பதால், பல கோவில்களில் கொள்ளையர்கள் புகாமல் இருக்க, பாதுகாப்பின்

அடையாளமாக நாகலிங்க மரங்கள் கோவில் முகப்பில் வளர்க்கப்படுகின்றன. இவ்வாறு ராம்சுந்தர் கூறினார்.

இத்தகைய சிறப்பு வாய்ந்த நாகலிங்க மலர்கள், பர்லியார் பண்ணையில் அதிகளவில் பூத்துள்ளன. இதனை வாங்கி செல்ல, பல கோவில்களை சேர்ந்தவர்கள் வருகின்றனர்.

## மஞ்சளார் அணையில் மழைநீர் வடிகால் பணி

தேவதானப்பட்டி:மஞ்சளார் அணையின் கீழ்ப்பகுதியில் மண் அரிப்பை தடுக்க மழைநீர் வடிகால் கட்டும் பணி நடந்து வருகிறது.தேவதானப்பட்டி அருகே உள்ள மஞ்சளார் அணை காமராஜர் முதல்வராக இருந்த போது கட்டப்பட்டது. உயரம் 57 அடி. மேற்குத் தொடர்ச்சி மலையில் உள்ள தலைணாறு, மூலாறு, வரட்டாறு, மஞ்சளாறு ஆகிய பகுதியில் பெய்யும் மழைநீர் ஆதாரமாகக் கொண்டு அணை நிரம்புகிறது. இதில் தேங்கும் நீரால் திண்டுக்கல், தேனிமாவட்டங்களில் 5 ஆயிரத்து 200 ஏக்கர் நிலம் பாசன வசதியைப் பெற்று, முதல் போக நெல் சாகுபடி நடந்து வருகிறது.

வடிகால் வசதி :கீழ்ப்பகுதியில் மழைக்காலங்களில் மண் அரிப்பை தடுப்பதற்காக அணை பராமரிப்பு நிதி ரூ.45 லட்சத்தில் மழைநீர் வடிகால் கட்டும் பணி நடந்து வருகிறது. இதற்காக முதற்கட்டமாக மண் அள்ளும் இயந்திரம் மூலம் பள்ளம் தோண்டப்படுகிறது. -

## நாளுக்கு நாள் வெயிலின் தாக்கம் அதிகரிப்பு: கரும்பு ஜூஸ் கடைக்கு மக்கள் படையெடுப்பு

நாமக்கல்: வெயிலின் தாக்கம் நாளுக்கு நாள் அதிகரித்து வருவதால், கரும்பு ஜூஸ் விற்பனை சூடு பிடித்துள்ளது.

நாமக்கல் அதன் சுற்றுவட்டார பகுதிகளில் கோடை வெயிலின் தாக்கம் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. அதை தாக்குப்பிடிக்க முடியாமல் மக்கள் கடும் அவதிப்படுகின்றனர். கடந்த மூன்று நாட்களாக வெப்பத்தின் அளவு, 104 டிகிரியை எட்டி உள்ளது. அதனால், வெப்பத்தின் தாக்கத்தில் இருந்து தப்பிக்க இளநீர், நுங்கு, கரும்பு ஜூஸ்,

வெள்ளரி பிஞ்சு, தர்பூசணி, குளிர்பானம் ஆகியவை விற்பனை செய்யும் கடைகளில் கூட்டம் அலைமோதுகிறது. மேலும், நகரின் பல்வேறு இடங்களில் கம்மங்கூழ் விற்பனை செய்து வருகின்றனர். கரும்பு ஜூஸ் விலை குறைவாக இருப்பதுடன், ஐஸ் கலந்து தருவதால், ஜில்லென்று இறங்குகிறது. ஒரு டம்ளர், ஐந்து ரூபாய்க்கு விற்பனை செய்கின்றனர். ஒருவர் இரண்டு, மூன்று டம்ளர் வாங்கி பருகுகின்றனர். அதன் மூலம், ஓரளவுக்கு வெயிலில் தாக்கத்தில் இருந்து தப்பிக்கலாம் என்பதால், கரும்பு ஜூஸ் விற்பனை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது.

தினகரன்

**இன்றைய வேளாண் செய்திகள்**

## செந்தில் மெட்ரிக் பள்ளியில் இயற்கை உணவு வகை விழிப்புணர்வு கண்காட்சி

தர்மபுரி, : செந்தில் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளியில் சிறுதானிய உணவு வகைகள் மற்றும் நாட்டு மூலிகை குறித்த கண்காட்சி நடந்தது.தர்மபுரி செந்தில் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளியில், சிறு தானிய உணவு வகைகள் மற்றும் நாட்டு மூலிகை மருத்துவம் குறித்து விழிப்புணர்வு கண்காட்சி நடந்தது. இதில், சிறு தானிய உணவு வகைகளான, கம்பு, வரகு, கேழ்வரகு, குதிரை வாலி, சாமை, திணை, சோளம் போன்றவற்றின் பயன்கள் குறித்து மாணவ, மாணவிகள் விளக்கினர். மேலும் சிறுதானியங்களின் பக்குவம், பாட்டி வைத்தியம், நாட்டு மூலிகை மருத்துவம் மாணவர்களின் விழிப்புணர்வு நிகழ்ச்சி நடந்தது. இந்நிகழ்ச்சியை பள்ளியின் நிர்வாக அலுவலர் சக்திவேல் தொடங்கி வைத்தார். பள்ளி முதல்வர்கள் வெங்கடாசலம், கிருஷ்ணவேணி, துணை முதல்வர்கள் வள்ளியம்மாள், ரபிக் அகமது ஆகியோர் மாணவ, மாணவிகளை பாராட்டினர். கண்காட்சியில் சிறப்பிடம் பெற்ற மாணவ, மாணவிகளுக்கு பரிசு வழங்கப்பட்டது.

## ஒரு கட்டு முருங்கை ரூ.120க்கு விற்பனை

போச்சம்பள்ளி, : கிருஷ்ணகிரி மாவட்டம் போச்சம்பள்ளி சுற்றுவட்டார பகுதிகளில் மிளகாய், பாகற்காய், தக்காளி, முள்ளங்கி, கத்திரி, முருங்கை போன்றவற்றை விவசாயிகள் சாகுபடி செய்துள்ளனர். கடந்த மாதம் இப்பகுதியில் அடித்த கடும் வெயில் காரணமாக செடி, கொடிகள் காய்ந்து வந்த நிலையில் முருங்கைக்காய் விளைச்சல் அமோகமாக இருந்தது. அப்போது 100 முருங்கை காய்கள் கொண்ட ஒரு கட்டு ரூ.60க்கு விற்பனை செய்யப்பட்டது. தற்போது திருமண சீசன் துவங்கி உள்ளதால், முருங்கைக்காய் விலை உயர தொடங்கியுள்ளது. இதனால் 100 முருங்கை கொண்ட ஒரு கட்டு ரூ.120க்கு விற்பனை செய்யப்படுகிறது. விலை உயர்ந்த போதிலும், முருங்கைக்காயை பொதுமக்கள் ஆர்வத்துடன் வாங்கிச் செல்கின்றனர்.

## இன்றைய வேளாண் செய்திகள்

**சேத்தியாத்தோப்புக்கு கரும்பு வரத்து குறைந்ததால் கூட்டுறவு சர்க்கரை ஆலையில் ஒரு வாரத்தில் அரவை நிறுத்தம் அதிகாரி தகவல்**



சேத்தியாத்தோப்பு,

சேத்தியாத்தோப்புக்கு கரும்பு வரத்து குறைந்ததால் கூட்டுறவு சர்க்கரை ஆலையில் ஒரு வாரத்தில் அரவை நிறுத்தம் செய்யப்படும் என்று அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

எம்.ஆர்.கே. கூட்டுறவு சர்க்கரை ஆலை

சேத்தியாத்தோப்பில் எம்.ஆர்.கே. கூட்டுறவு சர்க்கரை ஆலை உள்ளது. இந்த ஆலையில் ஆண்டுதோறும் 5 மாதங்கள் கரும்பு அரவை செய்யப்பட்டு வருகிறது. சிதம்பரம் தாலுகா, காட்டுமன்னார்கோவில்

தாலுகா, அரியலூர் மாவட்டம், ஓலையூர், ராஜேந்திர பட்டினம், ஆண்டிமடம், அழகாபுரம் உள்ளிட்ட பல பகுதிகளை சேர்ந்த விவசாயிகள் தங்களது விளைநிலத்தில் சாகுபடி செய்யப்படும் கரும்புகளை அரவைக்காக சேத்தியாத்தோப்புக்கு கொண்டு வருகின்றனர். கடந்த ஆண்டு 2 லட்சத்து 60 ஆயிரம் டன் கரும்பு அரவை செய்யப்பட்டது.

இந்த ஆண்டு கூடுதலாக கரும்பு அரைக்க வேண்டும் என்று ஆலை நிர்வாகம் திட்டமிட்டது. அதன்படி 2015–2016–ம் ஆண்டின் அரவை பருவம் கடந்த டிசம்பர் மாதம் 31–ந் தேதி தொடங்கியது. அப்போது, இந்த ஆண்டின் அரவை பருவத்திற்கு 3 லட்சம் டன் அரவை செய்யப்படும் என்று தலைமை கரும்பு அலுவலர் தெரிவித்திருந்தார்.

<u>ஒருவாரத்தில் நிறுத்தம்</u>

அதன்படி நாள் ஒன்றுக்கு 2 ஆயிரத்து 500 டன் வீதம் அரவை செய்யப்பட்டு வந்தது. இந்த நிலையில் கடந்த சில நாட்களாக சர்க்கரை ஆலைக்கு கரும்பு வரத்து குறைந்தது. இதன் காரணமாக கடந்த 2 நாட்களாக அரவையை நிறுத்தி ஓட்டும் நிலை உள்ளது. இதனால் கரும்பு அரவை படிப்படியாக குறைந்து வருகிறது.

இது குறித்து ஆலை அதிகாரி ஒருவர் கூறுகையில், இதுவரை 2 லட்சத்து 20 ஆயிரம் டன் கரும்பு அரவை செய்யப்பட்டுள்ளது. கரும்பு வரத்து குறைந்துள்ளதால் அரவை இயந்திரத்தை நிறுத்துகிறோம். பின்னர் பல கிராமங்களில் இருந்து கரும்பு லோடு வந்ததும், அரவை செய்து வருகிறோம். இந்த ஆண்டு அரவை பருவத்திற்கு 2 லட்சத்து 30 ஆயிரம் டன் அரைப்பதே பெரிய சவாலாக இருக்கும். எனவே ஒரு வாரத்தில் அரவை நிறுத்தம் செய்யப்படும் என்றார்.

<u>வரத்து குறைந்ததுக்கு காரணம் என்ன?</u>

கரும்பு வரத்து குறைவுக்கான காரணம் குறித்து விவசாயி ஒருவர் கூறுகையில், கரும்பு டன் ஒன்றுக்கு கடந்த ஆண்டு அரசு அறிவித்த விலை ரூ.2 ஆயிரத்து 750 ஆகும். ஆனால் விவசாயிகளுக்கு டன் ஒன்றுக்கு ரூ.2 ஆயிரத்து 200 தான் வழங்கப்பட்டது. அதேபோல் இந்த ஆண்டு கரும்பு டன் ஒன்றுக்கு 2 ஆயிரத்து 750 ரூபாயை அரசு அறிவித்தது. ஆனால் விவசாயிகளுக்கு டன் ஒன்றுக்கு ரூ.2 ஆயிரத்து 55 தான் வழங்கியது. அரசு அறிவித்த தொகையை எம்.ஆர்.கே. கூட்டுறவு

சர்க்கரை ஆலை வழங்குவதில்லை. அதுமட்டுமின்றி சர்க்கரை ஆலையில் நிலுவைத்தொகை பல கோடி ரூபாய் உள்ளது. அதனை கரும்பு விவசாயிகளுக்கு வழங்கப்படவில்லை.

இதனால் கரும்பு பயிர் சாகுபடி செய்வதில் விவசாயிகளுக்கு பெருத்த நஷ்டம் ஏற்படுகிறது. எனவே விவசாயிகள் கரும்பு சாகுபடி செய்வதில் ஆர்வம் குறைந்துள்ளது. பல ஆண்டுகளாக கரும்பு சாகுபடி செய்து வந்த விவசாயிகள், தற்போது மாற்று பயிரை சாகுபடி செய்து வருகின்றனர். இதனால் அரவைக்கு போதிய கரும்பு வருவதில்லை. எனவே வரும்காலங்களில் கரும்பு டன் ஒன்றுக்கு அரசு அறிவித்த தொகையை சர்க்கரை ஆலைகள் வழங்க வேண்டும். சர்க்கரை ஆலை நிர்வாகம் நிலுவைத்தொகையை வழங்குவதோடு, விவசாயிகளிடையே கரும்பு சாகுபடி ஆர்வத்தை அதிகரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார்

## தேனிக்கு 1,200 டன் புழுங்கல்அரிசி சரக்குரெயிலில் அனுப்பி வைக்கப்பட்டது



தஞ்சையில் இருந்து தேனிக்கு 1,200 டன் புழுங்கல்அரிசி சரக்குரெயிலில் அனுப்பி வைக்கப்பட்டது.

நெல் கொள்முதல்

தமிழகத்தில் பொதுவினியோக திட்டத்தின் கீழ் குடும்ப அட்டைதாரர்களுக்கு புழுங்கல்அரிசி, பச்சரிசி, மண்எண்ணெய், சர்க்கரை, பருப்பு போன்றவை வழங்கப்பட்டு வருகிறது. இதற்காக வெளிமாநிலங்களில் இருந்தும், வெளிமாவட்டத்தில் இருந்தும் புழுங்கல்அரிசி, பச்சரிசி போன்றவை தஞ்சை மாவட்டத்திற்கு கொண்டு வரப்படும். அதேபோல் தஞ்சையில் இருந்தும் பிற மாவட்டங்களுக்கு புழுங்கல்அரிசி, பச்சரிசி போன்றவை அனுப்பி வைக்கப்படும்.

தமிழகத்தின் நெற்களஞ்சியமாக விளங்கும் காவிரி டெல்டா மாவட்டங்களில் குறுவை, சம்பா, தாளடி என 3 போகம் நெல் சாகுபடி நடைபெறும். இது தவிர கோடை நெல் சாகுபடியும் நடைபெறுவது வழக்கம். இவ்வாறு சாகுபடி செய்யும் நெல் அறுவடை செய்யப்பட்டு, தமிழகஅரசின் நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் மூலம் கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது. இவ்வாறு கொள்முதல் செய்யப்படும் நெல், தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களுக்கு அரவைக்காக ரெயில் மற்றும் லாரிகள் மூலம் அனுப்பி வைக்கப்படும். மேலும் தஞ்சை மாவட்டத்தில் உள்ள அரசு மற்றும் தனியார் அரிசி ஆலைகளுக்கும் அரவைக்காக அனுப்பி வைக்கப்படுவது வழக்கம்.

1,200 டன் புழுங்கல் அரிசி

அவ்வாறு அரவைக்கு அனுப்பி வைக்கப்பட்ட நெல் பின்னர் பல்வேறு மாவட்டங்களுக்கு பொது விநியோகத்திட்டத்தில் வினியோகம் செய்ய அரிசி மூட்டைகளாக அனுப்பி வைக்கப்படுகிறது. அதன்படி தஞ்சையை அடுத்த பிள்ளையார்பட்டி, விளார், அம்மன்பேட்டை ஆகிய பகுதிகளில் உள்ள அரிசி ஆலைகள் மற்றும் குடோனில் இருந்து லாரிகளில் அரிசி மூட்டைகள் ஏற்றப்பட்டு தஞ்சை ரெயில் நிலையத்திற்கு நேற்று கொண்டு வரப்பட்டன.

பின்னர் இந்த அரிசி மூட்டைகள் சரக்குரெயிலில் ஏற்றப்பட்டன.

மொத்தம் 21 வேகன்களில் 1,200 டன் புழுங்கல்அரிசி ஏற்றப்பட்டது. இதையடுத்து இந்த சரக்குரெயிலில் தஞ்சையில் இருந்து தேனிக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

## நேரடி நெல் கொள்முதல் நிலையத்தில் நெல் விற்பனை தொடங்கியது அதிகாரிகள் நேரில் ஆய்வு



கண்ணமங்கலம்
வண்ணங்குளம் நேரடி நெல் கொள்முதல் நிலையத்தில்நெல் விற்பனை தொடங்கியது. அதிகாரிகள் நேரில் ஆய்வு செயச்தனர்.

நேரடி நெல் கொள்முதல் நிலையம்

கண்ணமங்கலத்தை அடுத்த வண்ணாங்குளம் பகுதியில் நேரடி நெல் கொள்முதல் நிலையம் கடந்த 7–ந் தேதி திறக்கப்பட்டது. இதனால் கொளத்தூர், மேல்நகர், வண்ணாங்குளம், அய்யம்பாளையம், வாழியூர், குப்பம், கண்ணமங்கலம், அத்திமலைப்பட்டு, இரும்பிலி, காட்டுக்காநல்லூர், 5புத்தூர் உள்பட 50–க்கும் மேற்பட்ட கிராமங்களை சேர்ந்த விவசாயிகள் மகிழ்ச்சியடைந்தனர்.

அவர்கள் தாங்கள் விளைவித்த நெல்லை விற்பனை செய்வதற்காக வண்ணாங்குளம் நேரடி நெல் கொள்முதல் நிலைத்திற்கு கொண்டு சென்றனர். ஆனால் அவர்கள் கொண்டு சென்ற நெல்லை

எடைபோடுவதற்கான வசதிகள் இல்லாததால் ஆயிரக்கணக்கான நெல் மூட்டைகள் தேங்கி கிடந்தது.

எடைபோடும் பணி தொடங்கியது

இதுபற்றி தினத்தந்தியில் படத்துடன் நேற்று செய்தி வெளியிடப்பட்டது. இதனையடுத்து அதிகாரிகள் உடனடி நடவடிக்கை எடுத்துள்ளனர். திருவண்ணாமலை நுகர்பொருள் வாணிப கழக கண்காணிப்பாளர் முருகன் மற்றும் அதிகாரிகள் வண்ணாங்குளம் நேரடி நெல் கொள்முதல் நிலையத்திற்கு சென்றனர்.

அங்கு அவர்கள் ஆய்வு செய்து நெல் மூட்டைகளை எடைபோடுவதற்கான நடவடிக்கைகளை எடுத்தனர். அதைத் தொடர்ந்து நெல் மூட்டைகளை எடைபோடும் பணியில் 13 தொழிலாளர்கள் ஈடுபட்டனர். மேலும் மாவட்ட தரக்கட்டுப்பாட்டு அலுவலர் சுப்பிரமணியனும் நேரில் ஆய்வு செய்தார். அப்போது கண்ணமங்கலம் வருவாய் ஆய்வாளர் திருவேங்கடம், கிராம நிர்வாக அலுவலர்கள் உடனிருந்தனர்.